ஹிந்து ஆலயப் பாதுகாப்பு இயக்கம்

முன்னுரை

பேரன்புடையீர், வணக்கம்.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் அவதரித்த இத்தெய்வீக தமிழகத்தில் ஹிந்துக்களிடம் விழிப்புணர்வும், ஒன்றுபட்ட சக்தியும் குறைந்த காரணத்தினால் நாத்திகம் என்ற பெயரில் ஹிந்து தெய்வங்களையும், அவதார புருஷர்களையும், வழிபாட்டு முறைகளையும், அவமதிக்கும் செயல்கள் துவங்கிய காலமான 1967-ஆம் ஆண்டு ஹிந்து ஆலயப் பாதுகாப்பு இயக்கம் துவக்கப்பட்டது. ஸ்தாபகர் மறைந்த சேலம் ராமசாமி அவர்களின் எழுச்சியான செயல்பாட்டால் தொடர்ந்து வலிமையான ஹிந்து சக்தி உருவானது. ஆன்மீக எழுச்சியும் தமிழகத்தில் தலை நிமிர்ந்தது ஆனாலும் மதசார்பற்ற இந்த அரசுகளின் கோரப்பிடியில் சிக்கிய நமது ஆலயங்களின் புனிதமும், சொத்துக்களும் பாதிக்கப்பட்டன. பக்தர்களிடமிருந்து பணத்தை பல்வேறு கட்டணங்கள் மூலம் சுரண்டும் தரிசன முறையும், வசதியற்ற பக்தர்களை அவமதிக்கும் செயல்களும் திருக்கோவில்களில் இன்றளவும் நிகழ்ந்து வருகின்றது. திருக்கோவில்கள் நமது சமுதாயத்தின் பரம்பரை சொத்து இதனை பாதுகாக்க ஏராளமான மகான்கள், மன்னர்கள், மக்கள் என பலரும் உயிர் தியாகம் உள்ளிட்ட பல்வேறு விதமான தியாகம் செய்துள்ளனர். நாமும் இதனை பாதுகாத்து நமது சந்ததிக்கு விட்டுச்செல்ல கடமைப்பட்டுள்ளோம். அதற்காக ஆன்மீக பணிகள் மூலம் மக்களை ஒன்றிணைக்கும் பணியினை ஹிந்து ஆலயப் பாதுகாப்பு இயக்கம் செய்து வருகின்றது. அதன் ஓர் பணியான திருவிளக்கு பூஜைக்கான இந்த புத்தகத்தை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். இதனை தாங்கள் தங்கள் வீட்டின் தினசரி பூஜையின் போது பயன்படுத்தி தெய்வீக அருள்பெற வேண்டுகிறோம்.

திருவிளக்கு வழிபாட்டின் தத்துவம்

பரம்பொருள் ஸர்வ வியாபகமாக எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. நமது ஆத்மாவாகவும் அந்த ஜோதியே விளங்குகிறது. எங்குமுள பரஞ்சுடரை தமக்குள் காண வல்லவர் ஞானியர். நம் போன்றோர் அந்த மேன்நிலை அடையவல்ல தெய்வீகமான சாதனைகள் பல பயிலுதல் வேண்டும்.

நல்லாருடன் இணங்கிப் பழகுதல், இறைவனின் பல்வேறு நாமங்களையும் குணங்களையும் பாடுதல், துதித்தல், நன்னூல்களைப் படித்தல், மூர்த்தி, தவம், தீர்த்தம் என்று கேஷித்திராடனம் செய்து தரிசனம் செய்தல் இவைகள் யாவும் நம்மை மேன்மைப்படுத்த வல்லவையாம்.

ஆலயங்களில் சென்று வழிபடுதல் போலவே நமது இல்லங்களிலும் நாள்தோறும் தெய்வ வழிபாடு செய்ய வேண்டியது மனிதர்களின் கடமையாகும். வீடுகளில் விக்ரஹங்கள், யந்திரங்கள் வைத்து முறையாக வழிபாடு செய்ய ஜபதீக்ஷை, வழிபாட்டு தீக்ஷை எடுத்துக்கொண்டு தினம் செய்பவர் பலர்.



இம்மாதிரி பூஜைகள் இல்லாத வீடுகளிலும் குடும்பத்தின் நலன் நாடி தாய்மார்கள் திருவிளக்கு வழிபாடு செய்யலாம். ஊர்மக்கள் பலரும் கூடி பொதுவான தலத்தில் திருவிளக்கு வழிபாடு செய்வது நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நலன்கள் அனைத்தும் கொடுக்கும். நாமும் பூஜை செய்ய வேண்டும் என்று ஆசைப்படும் பலரும் இந்தத் திருவிளக்கு வழிபாடு செய்து அம்பிகையின் அருள் பிரசாதத்தைப் பெற்று நலமடையலாம்.

திருவிளக்கு தெய்வத்தின் சின்னமாக விளங்குகிறது. இந்த வழிபாட்டில் பல தத்துவங்கள் பொதிந்துள்ளன. அம்பிகையின் திருமேனிப் பிரகாசம் மின்னாயிரம் திரண்டு ஒன்றான திருமேனி என்பது ஞானியர் கண்ட சத்தியம். மேல்நோக்கி எழுவதுதான் சுடரின் தன்மை. அந்தச் சுடர் நமக்குள்ளும் ஞான தீபமாக கொழுந்து விட்டு எரிந்து நமது அறிவையும், உணர்வுகளையும் உயர்த்தவல்லது.

வெளியே விளக்காய் ஒளிரும் சுடரொளியை அகத்திலும் உருவகப்படுத்திக் காண்பது சுலபமான முறைதான். புறத்தே சுடரொளி இருளை விரட்டுகிறது. அகத்தே அம்பிகையெனும் அருளொளி நமது அகத்திருளை அகற்றும்.

ஐம்புலன்களையும் புறத்தே ஓடாதபடி உள்முகமாக நிலைநிறுத்தி, நமக்குள் என்றும் பிரகாசிக்கும் ஸ்வயம் ஜோதியான

பரதேவதையை அகத்தே காணும் பொருட்டே ஐந்து முகம் கொண்ட விளக்கை ஏற்றி வழிபடுகிறோம்.

திருவிளக்கின் பீடம் பிரம்மா. மையத்தண்டு விஷ்ணு. மேற்பகுதி சிவன். ஐம்முகம் கொண்ட விளக்குப்பகுதி அம்பிகை. ஐந்தொழிலும் ஆற்றும் ஆற்றல்மிக்க சக்தி ஐந்து சுடர்கள். அவை 1.நிவிருத்தி (மனத்தை சிறிது சிறிதாக உலகாயதமான ஆசைகளிலிருந்து திருப்புதல்) 2.பிரதிஷ்டா (மனத்தில் தெய்வத்தை எழுந்தருளச் செய்தல்) 3.வித்யா (பரம்பொருளைப் பற்றிய ஞானத்தைத் தேடிப்பெற்று அதை வளர்த்துக் கொள்ளுதல்) 4. சாந்தி (இறை ஞானம் வளரும் போது கலக்கங்களும் குழப்பங்களும் நீங்கி அமைதியான மனநிலை பெறுதல். 5.சாந்தியதீதா (என்றும் எல்லையில்லா பேரமைதியில் திளைத்தல்).

இந்த நிலைகளாக அம்பாள் ஒளிருவதை ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமத்தில் கூறுகிறார்கள். நாம் தூண்டு சுடரனயா ஜோதியாகப் பிரகாசிக்கும் அம்பிகையை திருவிளக்கில் பூஜித்தல் இகம் பரம் ஆகிய இருநிலைகளிலும் எல்லா நலன்களையும் அடைதல் கூடும்.

விளக்கில் இடப்படும் திரிகளுக்குக் கூட தத்துவப் பொருளுண்டு. முக்குணங்களைக் குறிப்பிட மூன்று இழைகளினால் திரிக்கப்படும் திரிகள், பரதேவதையிடம் நாம் கொண்டுள்ள திடமான பக்தியும், ஆழ்ந்த அன்புமே. அதில் இடும் நெய், குருநாதரின் அருளால் கிட்டும் அகவெளிச்சமே சுடர். அவரது உபதேசத்தால் இந்த விளக்கு ஏற்றப்படுகிறது.

இந்த திருவிளக்கு பூஜை புத்தகத்தில் பூஜை முறையாக, சிறு சிறு விஷயங்களை கவனித்து செய்வதற்காக பூஜைக் குறிப்புகள் விவரமாக அடித்து கொடுக்கப்பட்டுள்ளது. பூஜைக்குத் தேவையான பொருட்கள் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளது. திருவிளக்கு பூஜைக்குத் தேவையான ஏற்பாடுகளுக்கு, "திருவிளக்கு பூஜைக்கு தயாராகுதல்" பகுதியில் முறையாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தில் திருவிளக்கு பூஜையின்போது திருவிளக்கில் ஸ்ரீ மீனாட்சியம்மனை ஆவாஹனம் செய்து பூஜிக்கும் முறை கூறப்பட்டுள்ளது. முதலில் விக்னங்கள் நீங்க விநாயகர் வழிபாடு, அடுத்து அம்பிகையின் வழிபாடு, பதினாறு வகை உபசாரங்கள், அதற்கு உரிய ஸ்லோகங்கள் உடன் தரப்பட்டுள்ளன.

சமஸ்கிருத ஸ்லோகங்களும், அவற்றின் பொருளும் தமிழில் தரப்பட்டுள்ளன. வீடுகளில் பெண்கள் இந்த புத்தகத்தின் துணை கொண்டு தாமே திருவிளக்கு பூஜை செய்யலாம். விரிவாகச் செய்ய இயலாவிடின் ஸ்லோகங்களை விடுத்து உபசாரங்களை மாத்திரம் செய்து பூஜிக்கலாம்.

ஸ்ரீ மீனாட்சிதேவியின் அஷ்டோத்திர சதநாம அர்ச்சனையும், தமிழில் 108 போற்றியும், 108 திருவிளக்கு போற்றியும் முறையாகத் தரப்பட்டுள்ளன. சமஸ்கிருத ஸ்லோகங்களைச் சொல்லி பூஜைசெய்ய இயலாதவர்கள் தமிழில் கொடுக்கப்பட்டுள்ள பொருளைப் படித்து பூஜை செய்து பயனடையலாம்.

இதேபோல் ஸ்ரீதுர்கா பரமேஸ்வரி, ஸ்ரீமஹாலெக்ஷ்மி பூஜைகளும் செய்து பயனுறலாம். அம்பிகையின் திருவருள் நம்மை என்றும் எப்பொழுதும், எல்லாவிடத்தும் அருள்மயச் சுடரொளியாகச் சூழ்ந்து காக்கட்டும்.

வாழ்க பக்தர்கள் திருக்கூட்டம்! தேவியின் திருவருளே துணை!!

– ஸ்ரீமதி சிவானந்த விஜயலக்ஷ்மி

ஹிந்து ஆலயப் பாதுகாப்பு இயக்கம், தமிழ்நாடு

முக்கிய நோக்கங்கள்

1. ஹிந்து ஆலய நிர்வாகத்தை ஒரு சுயாதிக்க அமைப்பின் கீழ் கொண்டுவர பாடுபடுவது.

2. மக்களுக்கும் ஆலயங்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவது.

3. மக்களிடையே சமய, சமுதாய ஆலய நலன்களைப் பாதுகாக்கும் உரிமை வேட்கையையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துவது.

4. ஆலயங்கள் தெய்வத்தன்மை நிறைந்த புனித இடமாகவும் சமய வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, சமுதாய ஒற்றுமை, சமூகப்பணி ஆகியவைகளின் கேந்திரமாகவும் செயல்படச் செய்வது.

5. ஆலயச் சொத்துக்களை சுயநலமிகளும், பிறமதத்தினரும் சுரண்டுவதை தடுத்தல்.

6. ஆலயங்களைச் சந்தைக்கடையாக மாற்றுவதை தடுத்தல்.

7. ஆலயக்கணக்குகளை பகிரங்கமாக பொதுமக்களுக்கு தெரிவிக்கும்படி வற்புறுத்தல்.

8. சமயம், ஆலயம், கடவுளர்களை கேவலப்படுத்தும் எந்த செயல்களையும் எதிர்த்துப் போராடுவது.

9. பின்தங்கிய பகுதிவாழ் மக்களிடையே சமய உணர்வு வளர்ப்பது.

10. ஆலய சொத்துகளிடமிருந்து உரிய வருமானம் கிடைக்கச் செய்தல்.

11. ஆலய நிலங்களுக்கு, இடங்களுக்கு சோஷலிச பாணி சட்டங்களிலிருந்து விதிவிலக்கு கிடைக்க பாடுபடுதல்.

12. ஆலய ஊழியர்களின் நிலை உயர பாடுபடுதல்.

திருவிளக்கு பூஜை குறிப்புகள்

கீழே குறிப்பிட்டுள்ள முக்கியமான சிறுசிறு குறிப்புகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. பூஜைக்கு உரிய பிரதான திருவிளக்கு மற்றும் பூஜாபாத்திரங்கள் பித்தளை, வெண்கலம் மற்றும் வெள்ளியினாலானதாக குத்துவிளக்காக இருப்பது மிகவும் சிறந்தது. எவர்சில்வர் தவிர்க்கவும்.

2. பிரதான திருவிளக்கை ஏற்றி, அதில் அம்பாளை எழுந்தருளச் செய்த பிறகு, திருவிளக்கு அசையக் கூடாது.

3. வீடுகளில் திருவிளக்கை வைக்க மரப்பலகையினாலான பீடம், சிமெண்டால் செய்யப்பட்ட பீடம், கற்பலகை (அல்லது) தாம்பாளத்தட்டை பயன்படுத்தலாம்.

4. திருவிளக்கு சரியான பீடத்தின் மீது நன்றாக தாராளமாக அட்சதை (அரிசி) இட்டு அமர்த்த வேண்டும்.

5. திருவிளக்கு நன்றாக நின்று எரிய ஓரளவு ஆழமாக நிரம்ப எண்ணெய் பிடிக்கும் விளக்கை பயன்படுத்த வேண்டும்.

6. பூஜை செய்யும் போது தீபச்சுடர்கள் அசையாமல் இருக்க வேண்டும். இடையடையே எண்ணெய் ஊற்றக்கூடாது. முதலிலேயே தாராளமாக எண்ணெய் ஊற்ற வேண்டும்.

7. உடைந்த, பிளவுபட்ட, ஒட்டப்பட்ட திருவிளக்குகளை பூஜைக்கு பயன்படுத்துவதை தவிர்க்கவும்.

8. திருவிளக்கு நன்றாக பளபளப்பாக இருக்க புளி, எலுமிச்சம்பழம், உமி, தவிடு, சீயக்காய் பொடி, சுத்தமான சாம்பல், அரப்புப்பொடி கொண்டு விளக்கலாம். ரசாயனப்பொருட்களை தவிர்க்கவும்.

9. திருவிளக்கை குறைந்தபட்சம் 2 (இரண்டு) திரிகள் இட்டு எண்ணெய் விட்டு ஏற்றலாம். ஐந்து முகங்களிலும் திரி இட்டு ஏற்றுவது சாலச்சிறந்தது.

10. கடைகளில் கிடைக்கும் விளக்குதிரி சுத்தமான வெள்ளைநூல் திரி அல்லது நாமே தயாரித்த பஞ்சுத்திரிகளை உபயோகிக்கலாம்.

11. வீட்டில் பயன்படுத்திய பழைய துணிகளை கிழித்து திரிகளாக்கி பயன்படுத்தக்கூடாது.

12. திருவிளக்கில் தீபம் ஏற்ற, ஏற்கெனவே எரிந்த திரிகளை தவிர்த்து புதுத்திரிகளை உபயோகிப்பது நல்லது.

13. திருவிளக்கு பூஜை முடியும்வரை காற்றில் அணையாமல் நின்று நிதானமாக எரிய கெட்டியான திரிகளை பயன்படுத்தலாம்.

14. திருவிளக்கில் நல்லெண்ணெய் அல்லது சுத்தமான பசுநெய் ஊற்றி விளக்கேற்றலாம்.

15. பூ மற்றும் மாங்கல்யக் கயிற்றை விளக்கின் தண்டு பாகத்தில் சூட்டலாம்.

16. திருவிளக்கை நேரிடையாக தீக்குச்சியின் மூலம் ஏற்றாமல் தீபக்கால், காமாட்சி விளக்கு, சிறிய அகல்விளக்கு (துணை விளக்கு) மூலம் ஏற்ற வேண்டும்.

17. ஊதுபத்தியை அதற்குரிய தட்டில் (அல்லது) நிறுத்தியில்

பொருத்த வேண்டும். பூஜைக்கு உரிய பழங்கள் மீது குத்தி வைக்கக்கூடாது.

18. பிரதான திருவிளக்கின் சுடரிலிருந்து ஊதுபத்தி, தசாங்கம், சூடம், கற்பூரம் இவற்றை ஏற்றக்கூடாது.

19. திருக்கோவில்களிலும் அனைவரும் சேர்ந்து திருவிளக்கு பூஜை செய்யும் இடங்களிலும் தவிர வீடுகளில் திருவிளக்கை தெற்கு திசை நோக்கி ஏற்றக்கூடாது.

20. பூஜை முடிந்த பிறகு எரிந்து கொண்டிருக்கும் தீபத்தையோ, சூடத்தையோ வாயால் ஊதி அணைக்கக்கூடாது.

21. தரையில் அமர்ந்து பூஜை செய்யக் கூடாது. சிறிய விரிப்பு, தடுக்கு மணை அல்லது பலகை மேல் அமர்ந்து பூஜை செய்ய வேண்டும்.

22. வீடுகளில் பூஜை செய்யும் போது திருவிளக்கை கிழக்குமுகமாக வைத்து பூஜை செய்பவர் திருவிளக்கிற்கு வலதுபுறத்தில், வடக்குமுகமாக அமர்ந்து செய்ய வேண்டும்.

23. பூஜைக்கு தேவையில்லாத பொருட்களை ஒதுக்கி வைக்க வேண்டும்.

24. எண்ணெய் மற்றும் தண்ணீரை துடைக்க தனியாக துணி வைத்துக் கொள்ள வேண்டும்.

25. பூஜைக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னதாக செய்து கொள்ள வேண்டும். பூஜை செய்ய அமர்ந்த பிறகு நடுவில் எழுந்திருக்கக் கூடாது.

26. பூஜைக்கு தயாராகும் முன் அனைத்து பொருட்களையும் மிகவும் சிரத்தையுடன் சேகரித்து கடவுள் திருநாமங்களை ஜபித்துக் கொண்டு திருவிளக்கு பூஜை குறிப்புகளை கவனமாக படித்து அதன்படி பூஜைக்கு தயாராக வேண்டும்.

27. பூஜை முடியும் வரை ஸ்லோகங்களையும் திருநாமங்களையும் உச்சரித்துக்கொண்டே இருப்பதன் மூலம் நமது மனம் வேறு விஷயங்களில நாட்டம் கொள்ளாமல் இருக்கும்.

பூஜைக்குத் தேவையான பொருட்கள்

1. திருவிளக்கு

2. பச்சரிசி மாவு (கோலமிடுவதற்கு)

3. நுனி வாழை இலை

4. பச்சரிசி 1/2 படி (திருவிளக்கை பிரதிஷ்டை செய்ய, பூஜைக்கு மறுநாள் சமையலில் சேர்க்கலாம்.)

5. மஞ்சள் பொடி

6. சந்தனம்
7. குங்குமம்
8. பூச்சரம் (விளக்கின் உயரத்திற்கு ஏற்றாற்போல்)
9. உதிரிப்பூக்கள்
10. அட்சதை (நுனிமுறியாத மஞ்சள் கலந்த பச்சரிசி பிடியளவு)
11. எண்ணெய் (தேவையான அளவு)
12. பஞ்சுத்திரி – 6
13. ஊதுபத்தி
14. சாம்பிராணி அல்லது தசாங்கம்
15. கற்பூரம்
16. தீப்பெட்டி
17. வெற்றிலை – 7
18. பாக்கு – 4
19. வாழைப்பழம்
20. மஞ்சள் கிழங்கு
21. தேங்காய்
22. நிவேதனப் பொருட்கள் (பழம், பால், வெல்லம், கற்கண்டு, சர்க்கரைப்பொங்கல், சுண்டல், சுத்த அன்னம் வசதிக்கு ஏற்றாற்போல்)
23. கற்பூரத்தட்டு
24. ஊதுபத்தி நிறுத்தி
25. தூபக்கால்
26. தீபக்கால் அல்லது சிறுவிளக்கு
27. பஞ்சபாத்திரம்
28. உத்தரிணி
29. பூஜாமணி
30. தீர்த்த பாத்திரம் (சிறிய கிண்ணம்)
31. சிறிய தட்டு
32. தாம்பாளம்
33. உட்கார சிறிய விரிப்பு (அல்லது) மணை

திருவிளக்கு பூஜைக்குத் தயாராகுதல்

பூஜைக்கு உரிய திருவிளக்கு (குத்துவிளக்கைப் பயன்படுத்துவது சாலச் சிறந்தது) மற்றும் அனைத்து பூஜா பாத்திரங்களையும் தூய்மையாக விளக்கி, திருவிளக்கை தூய நீரால் திருமுழுக்காட்டி, சுத்தமான துணியால் துடைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பூஜை செய்யும் இடத்தில் சுத்தம் செய்து தேவையற்ற பொருட்களை அகற்றி, திருவிளக்கை எல்லோரும் வலம் வர வசதியான இடத்தை தண்ணீர் தெளித்து மெழுகி மாக்கோலம் போடவேண்டும்.

பூஜைக்கு உரிய பீடம் இருந்தால் தூய்மைப்படுத்தி மாக்கோலம் போடவேண்டும். திருவிளக்கு வைக்கும் பீடத்தின் மீது ஒரு தூய்மையான தாம்பாளத்தட்டு அல்லது வாழை இலை (இலையின் முனை விளக்குக்கு இடப்புறம் வடக்கு நோக்கி இருக்க வேண்டும்.)

அதில் அட்சதையை (தூய்மையான பச்சரிசி) பரப்பி அதன்மீது திருவிளக்கு அசையாதபடி வைக்க வேண்டும். (அந்த அரிசியை மறுநாள் சமையலில் சேர்த்து விடலாம்.) திருவிளக்கிற்கு சந்தனம், குங்குமம் இட்டு மலர்கள் சூடி அலங்கரிக்க வேண்டும். பூஜைக்கு என்று உள்ள திருவிளக்கு, பூஜையின்போது அசைதல் கூடாது. இதில் சரியான கவனம் தேவை.

தீபக்கால் அல்லது காமாட்சி விளக்கு அல்லது அகல்விளக்கு (துணை விளக்கிற்காக) திரியிட்டு எண்ணெய்விட்டு தயாராக வைத்துக்கொள்ள வேண்டும்.

எந்த தெய்வத்திற்கு பூஜை செய்வதானாலும் முதலில் விக்னங்கள் நீங்க (இடையூறுகள் நீங்க) விநாயகர் பூஜை செய்ய வேண்டும்.

அதற்காக விநாயகர் திருவுருவை மஞ்சள் பொடியில் தூயநீர் சேர்த்து பிடித்து திருவிளக்கு முன் சிறிய தட்டு அல்லது வெற்றிலை மீது வைக்க வேண்டும்.

அந்த மஞ்சள் பிள்ளையாருக்கு சந்தனம் குங்குமம் இட்டு பூச்சூடி அலங்கரிக்க வேண்டும். பிள்ளையாருக்கு பூஜையின்போது நிவேதனத்திற்கு வெற்றிலை, பாக்கு, பழம் தனியாக வைக்க வேண்டும். பூஜைக்கு உரிய நிவேதனப் பொருட்களை திருவிளக்கு முன் வாழை இலையிலோ அல்லது தாம்பாளத்திலோ வைக்க வேண்டும்.

பிரதான விளக்கிற்கு வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பழங்கள், தனியாக வைக்க வேண்டும். கற்பூரத்தட்டில் சிறிதளவு திருநீறு வைத்து அதன்மேல் கற்பூரம் வைத்து அருகில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பூஜைக்கு அமர்வதற்கு முன் திருவிளக்கிற்கு நமஸ்காரம் செய்து அமர வேண்டும்.

பூர்வாங்க பூஜை

ஆசமனம்

(தீர்த்தத்தை உத்தரணியில் எடுத்து வலது உள்ளங்கையில் விட்டு கீழ்க்கண்ட மந்திரத்தை உரைத்து உட்கொள்ளவும்)

அச்சுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம:

(அக்ஷதை புஷ்பத்தைக் கையிலெடுத்துக் கொண்டு இரண்டு கைகளாலும் நெற்றியின் இருபுறத்தும் குட்டிக் கொண்டு சுக்லாம்பர தரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்।
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே॥
என்று ஜபித்து அக்ஷதையை விளக்கின் கீழே போடவும்)

தீபம் ஏற்றுதல்

ஓம் ஒளி வளர் விளக்கே போற்றி।

என்று சொல்லிக் கொண்டே தீபம் ஏற்ற வேண்டும். பின் திருவிளக்கு அகவல் சொல்ல வேண்டும்.

திருவிளக்கு அகவல்

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
ஜோதிமணி விளக்கே சீதேவிப் பெண்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாட்சி தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சுதிரி போட்டு
குளம்போல நெய்விட்டு கோலமுடன் ஏற்றி வைத்தேன்
ஏற்றினேன் திருவிளக்கு எந்தன் குடிவிளங்க
வைத்தேன் திருவிளக்கு, மாளிகையும், தான்–விளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவை கண்டு மகிழ்ந்தேன் யான்
மாங்கல்ய பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
சந்தான பிச்சையுடன் தனங்களும் தாருமம்மா
பெட்டி நிறைய பூஷணங்கள் தாருமம்மா
பட்டி நிறைய பால்பசுவைத் தாருமம்மா
புகழுடம்பை தாருமம்மா பக்கத்திலே நில்லுமம்மா

அல்லும் பகலும் என் அண்டையில் நில்லுமம்மா
சேவித்தெழுந்திருந்தேன்; தேவி வடிவம் கண்டேன்
வஜ்ஜரக் கிரீடங் கண்டேன் வைடூரிய மேனி கண்டேன்
முத்துக் கொண்டை கண்டேன்; முழுப் பச்சை மாலை கண்டேன்
சவுரி முடியக் கண்டேன்; தாழைமடல் சூடக் கண்டேன்
பின்னலழகு கண்டேன்; பிறைபோல் நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன்; தயாரார் வடிவங் கண்டேன்
கமலத் திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டு கண்டேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலையசையக் கண்டேன்
கைவளையல் கலகலவெனக் கணையாழி மின்னக்கண்டேன்

தங்க ஒட்டியாணம் தகதகவென – ஜொலிக்கக்கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் காலாழி பீலி கண்டேன்
மங்கள நாயகியை மனங்குளிரக்கண்டு கொண்டேன்
அன்னையே அருந்துணையே அருகிருந்து – காத்திடுவாய்
வந்த வினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
குடும்பக்கொடி விளக்கே! குற்றங்கள் பொறுத்திடம்மா
குறைகள் தீர்த்திடம்மா! குடும்பத்தைக் காத்திடம்மா
தந்தையும் தாயும் நீ! சற்குருவும் நீயேயம்மா
புவனம் முழுவதும் நலங்கள் காத்திடம்மா
கற்பகவல்லியே நீ புவியனைத்தும் வளங்கள் தாருமம்மா
சகலகலா வல்லித்தாயே சகலவித்தைகளைத் தாருமம்மா
அபிராமவல்லி அம்மா! அடைக்கலம் நீயே அம்மா
தாயாரே உன்றன் தாளடியில் சரணடைந்தேன்
மாதாவே உன்றன் மலரடியில் சரணடைந்தேன்.

(அக்ஷதை புஷ்பத்தை வலது கையில் எடுத்து வலக்கரத்தை வலது தொடையின் மீது கீழே இடக்கையால் தாங்கி வைத்துக் கொண்டு பின்வருமாறு கூறவும்)

மமோபார்த்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீபரமேச்வர ப்ரீத்யர்த்தம் கரிஷ்ய மாணஸ்ய கர்மண: நிர்விக்னேன ப்ரிஸமாப்த யர்த்தம், ஆதௌ ஸ்ரீகணேச்வர பூஜாம் கரிஷ்யே.

(என்னால் முன் வினைகளால் திரட்டப்பட்ட அனைத்துப் பாவகர்மாக்களும் நசிக்கவும், அதன் மூலமாய் ஸ்ரீ பரமேச்வரரின் அருள்கிட்டவும் இப்போது நான் செய்யவிருக்கும் காரியம் எவ்விதத் தடையுமின்றி நன்கு நிறைவேறவும் கோரி துவக்கத்தில் ஸ்ரீ கணேச்வர பூஜை புரிகிறேன்.)

விக்னேச்வர பூஜை

மஞ்சளால் பிள்ளையாரைப் பிடித்து வைத்துக் கொண்டு பூஜிக்கவும்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடிபோற்றுகின்றேனே.

1. அஸ்மின் ஹரித்ரா பிம்பே ஸ்ரீ விக்னேஷ்வரம் த்யாயாமி

இந்த மஞ்சள் பிம்பத்தில் ஸ்ரீ விக்னேச்வரரைத் தியானிக்கிறேன்.

2. ஆவாஹயாமி ।

ஸ்வாமியை கும்பத்தில் எழுந்தருளப் பிரார்த்திக்கிறேன்.

- புஷ்பத்தால் பூஜிக்கவும்.

3. ஆஸனம் ஸமர்ப்பயாமி ।

விநாயகர் வீற்றிருக்க ஆஸனமளிக்கிறேன்.

- புஷ்பத்தை அர்ப்பிக்கவும்.

4. பாத்யம் ஸமர்ப்பயாமி ।

கால்களை சுத்தம் செய்கிறேன்.

- ஒரு உத்தரிணி ஜலத்தை உபசார பாத்திரத்தில் விடவும்.

5. அர்க்யம் ஸமர்ப்பயாமி, ஆசமனீயம் ஸமர்ப்பயாமி ।

- ஜலத்தை சமர்ப்பிக்கவும்.

6. ஸ்நபயாமி ।

ஸ்வாமிக்கு திரு நீராட்டு செய்விக்கிறேன்.

- புஷ்பத்தால் தீர்த்தத்தை ஸ்வாமி மீது தெளிக்கவும்.

7. ஸ்நானானந்தரம் ஆசமனீயம் ஸமர்ப்பயாமி ।

நீராட்டிற்குப் பிறகு ஆசமனீயம் தருகிறேன்

- ஜலத்தை உத்தரணியால் தீர்த்தப் பாத்திரத்தில் விடவும்.

8. வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி ।

தீவ்விய ஆடை அணிவிக்கிறேன்.

- மலரை சமர்ப்பிக்கவும்

9. உபவீதம் ஸமர்ப்பயாமி ।

பூணூல் ஸமர்ப்பிக்கிறேன்

- மலரை சமர்ப்பிக்கவும்.

10. திவ்ய பரிமள கந்தான் தாரயாமி ।

வாசனைப் பரிமளச் சந்தனம் அணிவிக்கிறேன்.

- சந்தனத்தை ஸமர்ப்பிக்கவும்.

11. அக்ஷதான் ஸமர்ப்பயாமி ।

அக்ஷதை ஸமர்ப்பிக்கிறேன்.

- அக்ஷதையைத் தூவவும்.

12. புஷ்பை : பூஜயாமி ।

மலர்களால் அர்ச்சிக்கிறேன்.

- மலர்கள் இட்டு பூஜிக்கவும்.

1. ஓம் ஸுமுகாய நம:
2. ஓம் ஏகதந்தாய நம:
3. ஓம் கபிலாய நம:
4. ஓம் கஜகர்ணகாய நம:
5. ஓம் லம்போதராய நம:
6. ஓம் விகடாய நம:
7. ஓம் விக்னராஜாய நம:
10. ஓம் கணாத்யக்ஷாய நம:
11. ஓம் பாலசந்த்ராய நம:
12. ஓம் கஜானனாய நம:
13. ஓம் வக்ர துண்டாய நம:
14. ஓம் சூர்ப்ப கர்ணாய நம:
15. ஓம் ஹேரம்பாய நம:
16. ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம:

8. ஓம் விநாயகாய நம:
9. ஓம் தூமகேதவே நம:
17. ஓம் ஸித்தி விநாயகாய நம:
18. ஓம் ஸ்ரீ மஹாகணபதியே நம:

13. தூபம் ஆக்ரோபயாமி ।

பகவானுக்கு தூபத்தை நுகர்தற் பொருட்டு அளிக்கிறேன்.

- ஊதுபத்தி காட்டவும்.

14. தீபம் தர்ஷயாமி ।

நிவேதனங்களை ஊட்டுகிறேன்.

- வாழைப்பழம் நிவேதிக்கவும்.

15. நைவேத்யம் நிவேதயாமி ।

நிவேதனங்களை ஊட்டுகிறேன்.

- வாழைப்பழம் நிவேதிக்கவும்.

16. கற்பூரம் தாம்பூலம் ஸமர்ப்பயாமி ।

வெற்றிலை அர்ப்பணிக்கிறேன்.

- வெற்றிலை நிவேதனம் செய்யவும்.

ஸ்ரீ மஹா கணபதயே நம: கற்பூர நிராஞ்ஜனம் தர்சயாமி ।

- கற்பூரம் சுற்றி அர்ப்பணிக்கவும்.

ஸ்ரீ மஹா கணபதயே நம: ஸமஸ்த உபசார பூஜாம் ஸமர்ப்பயாமி ।

அனைத்து உபசார பூஜைகளையும் அர்ப்பணிக்கிறேன்.

- என்று மலரிட்டு வணங்கவும்.

துங்கக் கரிமுகத்து தூமணியே
எங்கள் கர்மம் யாவிலும் கை கொடுத்து
சங்கடங்கள் யாவும் சடுதியில் நீங்கிடவும்
மங்களம் பலவும் மிகுந்து வர அருள்புரிவாய்

பிரார்த்தனை

வக்ரதுண்ட மஹாகாய ஸூர்யகோடி ஸமப்ரப ।
நிர்விக்னம் குருமே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா ॥

வளைந்த தந்தமுடையவனே, பெரிய சரீரத்தைப் பெற்றவனே, கோடி சூரியனுக்கு ஒப்பான ஒளி பொருந்தியவனே, எல்லாச் செயல்களும், எக்காலமும், தடைகள் ஏதுமின்றி நிறைவேற அருள் புரிவீராக

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கை தொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே

மஹா ஸங்கல்பம்

மமோபார்த்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீ பரமேஷ்வர ப்ரீத்யர்த்தம்
அஸ்மாகம் ஸஹ குடும்பானாம் க்ஷேமஸ்தைர்ய வீர்ய விஜய
ஆயுராரோக்ய ஐச்வர்ய அபிவிருத்யர்தம், ஸமஸ்த துரிதோப சாந்த்யர்த்தம்

(திருமணமான பெண்கள் சொல்ல வேண்டியது)

தீர்க்க ஸௌமாங்கல்ய அபிவ்ருத்யர்த்தம்
ஸ்ரீ மீனாக்ஷ்யம்பிகா ப்ரஸாத ஸித்யார்த்தம் ஸ்ரீ மீனாக்ஷ்யம்பிகா
ப்ரஸாதேன ஸமஸ்த மங்கள அவாப்த்யர்த்தம் அஸ்மின் தீபே
ஸ்ரீ மீனாக்ஷ்யம்பிகா பூஜாம் யாவச் சக்தி த்யான – ஆவாஹ்னாதி
ஷோட சோபசார பூஜாம், அஷ்டோத்தர ஷத நாமார்ச்சனம் ச கரிஷ்யே ॥

(என்னால் முற்பிறவியிலும் இப்பிறவியிலும் முன்னர் திரட்டப்பட்ட அனைத்து தீங்குகளும் நீங்குவதன் மூலமாக ஸ்ரீ பரமேச்வரரின் திருப்தி ஏற்படவும், எங்கள் குடும்பத்தால் அனைவரும் அனைத்து நலன்களையும், மன உறுதியையும், திட்பத்தையும், வெற்றியையும், ஆயுள், ஆரோக்கியம், செல்வம், யாவும் மேலும், மேலும் வளர்ச்சி பெறவும், அனைத்துக் கஷ்டங்களும் விலகவும், நீண்ட சுமங்கலித் தன்மை பெற்று ஸௌபாக்யங்கள் பெற்று இன்புறவும், ஸ்ரீ மீனாக்ஷி தேவியின் திருவருள் கிட்டவும், ஸ்ரீ அங்கயற்கண்ணியின் திருவருளால் அனைத்து மங்கலங்களும் பெற்று இன்புறவும் வேண்டி இந்த தீபத்தில் ஸ்ரீ அம்பிகைக்கு என்னால் இயன்ற அளவு தியானம், ஆவாஹனம் முதலிய பதினாறு உபசார பூஜைகளையும் செய்து நூற்றெட்டு மலர் அர்ச்சனையும் புரிகிறேன்.)

“மேவிடும் பரதக் கண்டம்
மேருவின் தென்பால் இந்த
தேவரும் விரும்பும் புண்ணிய
நாட்டில் பொலிவுறு இம்மதுரை மாநகரில்
சூழ்ந்திட நலன்கள் யாவும்
சூழ்ந்திடும் பக்தியாலே”
அபோபஸ்ப்ருச்ய ॥

(கையால் நீரைத் தொட்டுக் கொள்ளவும்)

ஸ்ரீ விக்னேச்வரம் யதா ஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி ॥
சோபநார்த்தே க்ஷேமாய புனராகமநாய ச ॥

ஸ்ரீ கணபதியை அவரது இருப்பிடத்தில் சேர்ப்பிக்கிறேன். மங்களத்தின் பொருட்டும், மீண்டும் எழுந்தருளும் பொருட்டும் நலன் கருதியும் வேண்டிக் கொள்கிறேன்.
- இப்படிச் சொல்லி மஞ்சள் பிள்ளையாரை வடக்கு நோக்கி நகர்த்தி அவரது திருவடியில் சேர்ப்பித்த புஷ்பத்தை கண்ணில் ஒற்றிக்கொண்டு சூடிக்கொள்ளவும்.

கலச பூஜை

கையை நீரால் தொட்டு சுத்தமாக்கிக் கொண்டு, அடுத்து கலச பூஜை செய்யவும்.
பஞ்ச பாத்திரத்தில் நாற்புறமும் சந்தன குங்குமம் இட்டு ஜலத்தால் நிரப்பிக் கொள்ளவும். அதில் அவரவர் இச்சைக்கேற்ப ஏலப்பொடி, குங்குமப்பூ, பச்சை கற்பூரம், சந்தனம், பன்னீர் முதலியவை சேர்க்கலாம். மலர்களால் அந்தத் தீர்த்தத்தை பரிசுத்தப்படுத்தி பூஜை செய்யவும்.

கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி ।
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸந்நிதிம் குரு ॥
கங்காயை நம: யமுனாயை நம: கோதாவர்யை நம: ஸரஸ்வத்யை நம:
நர்மதாயை நம: ஸிந்தவே நம: காவேர்யை நம:
புஷ்பை: பூஜயாமி

கலசத்தில் உள்ள நீரில்
கங்கையும் யமுனை தானும்
கோதாவரி, சரஸ்வதி, நர்மதை
சிந்து காவிரி தானும்
எழுந்தருளி இறையருள் தருவீரே

கண்டா பூஜை

பூஜா மணிக்கு சந்தனமிட்டு குங்குமம் இட்டு பூ சூட்டி அதனை கையில் எடுத்து

ஆகமநார்த்தம் து தேவாநாம் கநார்த்தம் து ரக்ஷஸாம் ।
கண்டாரவம் கரோம்யாதெள தேவதாஹ்வாந லாஞ்ச நா ॥
அரக்கர்கள் அரண்டு ஓட
அமரர்கள் திரண்டு சூழ

மணிநாதம் எழுப்புகின்றேன் யான்
மகிழ்ந்து அருள்புரிவாய் நீயும்

என்று கூறி மணியை அடிக்கவும்.

குரூர் ப்ரம்ஹா குரூர் விஷ்ணுர் குரூர் தேவோ மஹேச்வர: ।
குருஸ் ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: ॥

(மலரிட்டு வணங்கவும் குருநாதரை மனத்தால் தியானிக்கவும்)

தீப ஸ்தாபனம்

பிரதான தீபத்தில் அம்பாளை ஆவாஹனம் செய்தல்

இக்ஷூகோதண்ட புஷ்பேஷூ பாசாங்குச கரோஜ்வலாம் ।
உத்யத் ஸூர்ய நிபாம் வந்தே மஹா த்ரிபுர ஸுந்தரீம் ॥

(கரும்பு வில், மலர்க்கணை, பாசம் அங்குசம் இவைகளை கரங்களில் ஏந்தி பிரகாசிக்கும், உதய காலத்து உதிக்கும் சூரியனுக்கொப்பான ஒளி பொருந்திய மஹா திரிபுர சுந்தரியை வணங்குகிறேன்.)

ஸ்ரீமத் சுந்தர நாதஸ்ய தேவீம் ஸபர லோசநாம் ।
கலயே ஹ்ருதயே நித்யம் கதம்பவன வாஸினீம் ॥

(ஸ்ரீ சுந்தரேஸ்வர நாதரின் நாயகியான மீன விழியாளாகிய கதம்ப வன வாசினியான ஸ்ரீ மீனாக்ஷியம்மனை இதயத்தில் யாண்டும் தியானிக்கிறேன்.)

பாலார்க்காருண பத்ம பீட நிலயாம் வாமாதி சக்த்யாவ்ருதாம்
ஏலாகந்தி ஸ்குந்தளாம் த்விநயனாம் ஹோமாம்பராலங்க்ருதாம்
வாமே லம்பித தோர்லதாம் ஸ்சரணாம் தக்ஷேகரேந்தீவராம்
ச்யாமாபாம சரதிந்து சாருவதனாம் த்யாயேத் ஸ்மீனே க்ஷணாம்

(இளங்கதிரவனை நிகர்த்த ஒளி வீசும் பத்ம பீடத்திலமர்ந்தவளும், வாமா முதலிய சக்திகளால் சூழப்பட்டவளும், ஏலாதி வாசனை வீசும் அழகிய அளகபாரத்தை உடையவளும், இரு நேத்திரங்களோடு திகழ்பவளும் தகதகக்கும் தங்கப்பட்டாடையால் அலங்கரிக்கப்பட்டவளும், இடப்புறத்தே தொங்கும் கரமும் இந்தீவர மலரை ஏந்திய வலக்கரத்தை உடையவளும், நீல வண்ணப் பிரகாசத்தோடு கூடிய நிறத்தவளும், சரத்கால நிலவொத்த அழகிய முகமுடையவளுமான அழகிய மீன விழியாளான தேவியை தியானம் செய்யவும். இப்படி மகரிஷிகள் ஸ்ரீ மீனாக்ஷி தேவியை மனத்தில்

உணர்வுகளால் சித்திரமாக எழுதிப்பார்க்கும் படி உபதேசித்துள்ளனர். - இவ்வண்ணம் பரதேவதையை தியானித்து திருவிளக்கில் அம்பிகையை எழுந்தருள வேண்டும் என்று பிரார்த்திக்கவும்.)

வழிபடல் வேண்டி நானும்
நின்னையே மனதில் பதித்து
திருவிளக்கு ஏற்றி வைத்தேன்
விழுமிய தீபந்தன்னில்
விளங்க நீயும் வாராய்.
ஓம் ஸ்ரீ மீனாக்ஷி அம்பிகையே
ஆகச்ச வரதே தேவி ஸர்வ ஸம்பத் ப்ரதாயினி ।
பூஜாம் க்ருஹாண ஸ்முகி நமஸ்தே சங்கர பிரியே ॥

(எழுந்தருளுக தேவி நல்வரங்களைத் தருபவளே,
எல்லா சம்பத்துக்களையும் வழங்குபவளே,
நன்முகமுடையவளும் (அருள் புரியும் மனோநிலை),
சங்கர நாயகியுமான தேவி தாயே, நான் ஆற்றும்
இந்த வழிபாட்டை ஏற்றருள்க)

ஓம் ஸ்ரீ மீனாக்ஷ்யை நம । ஆவாஹிதா ப4வ ।
ஸ்தாபிதா ப4வ । ஸந்நிஹிதா ப4வ ।
ஸந்நிருத்தா ப4வ । அவ குண்டிதா ப4வ ।
ஸ்ப்ரீதா ப4வ । ஸ்ப்ரஸந்தா ப4வ ।
ஸ்முகீ ப4வ । வரதா ப4வ ।
ப்ரஸீத ப்ரஸீத தேவி ஜகந்நாயிகே ।
யாவத் பூஜாவஸானகம் தாவத் த்வம் ப்ரீதி
பாவேன தீபேஸ்மின் ஸந்நிதிம் குரு ॥

(பரதேவதையே, இந்த தீபத்தில் நிலைத்தவளாய் எழுந்தருளுக, எமதருகே வருக, தடைகளற்றவளாய் அருகிருந்து அருளுக, எமைச் சூழ்ந்திருந்து எமை ஈர்த்து அருளுக, திருப்தியுடையவளாக அருளுக, மனமகிழ்ச்சியுடனே மலர்ந்தருளுக. அருள் புரியும் இன்முகத்தவளாய் அருளுக. வரங்கள் தருபவளாய் திகழுக, இரங்கி அருளுக, உலக நாயகியே, எதுவரை இந்த வழிபாடு நடக்கிறதோ அதுவரை நீ சந்தோஷத்துடன் இந்த தீபத்தில் தோன்றி நின்றருளுக.)

இப்படி பிரார்த்தித்து மலர்களை அர்ச்சித்து வேண்டுக.

1. ஓம் ஸ்ரீ மீனாக்ஷ்யம்பிகே மஹாபாகே ரக்ஷார்த்தம் மம ஸர்வதா ।
ஆவாஹயாம்ஹம் தேவிம் ஸர்வ காமார்த்த ஸித்தயே ॥

(பேரருள் புரியும் அம்பிகே மீனாக்ஷி என்னை என்றும் காக்கும் பொருட்டும், கோரிய நலன்கள் யாவும் பெறவும்

உன்னை இங்கு ஆவாஹனம் நிலைத்திருந்து அருளும்படி செய்கிறேன்).

புஷ்பத்தால் தீபத்தின் திருவடியில் அர்ச்சிக்கவும்.

2. அநேக ரத்ன ஸம்யுக்தம் நாநா மணிகணான் விதம் ।
காரத்த ஸ்வர்ணமயம் திவ்யம் ஆஸனம் ப்ரதி க்ருஹ்யதாம் ॥

(பலபல ரத்தினங்களால் இழைக்கப்பட்டதும், பலமணிகளால் அமைக்கப்பட்டதும், தங்கமயமானதுமான திவ்யமான ஆஸனத்தை ஏற்றருளுக)

ஸ்ரீ மீனாக்ஷ்யை நம: ஆஸனம் ஸமர்ப்பயாமி ।

3. கங்காதி ஸர்வ தீர்த்தேப்யோ மயா ப்ரார்த்தனயா ஹ்ருதம் ।
தோயமேதத் ஸுகஸ்பர்சம் பாத்யார்த்தம் ப்ரதிக்ருஹ்யதாம் ॥

(கங்கை முதலிய ஸகல நன்னீர்களிலிருந்தும் என்னால் முயன்று கொணரப்பட்டதும், தீண்டுதற்க இனியதுமான இந்த நீரை கால் விளக்கும் நீராகத் தருகிறேன், ஏற்றருளுக)

தீர்த்தம் ஸமர்ப்பிக்கவும்.

ஸ்ரீ மீனாக்ஷ்யை நம: பாத்யம் ஸமர்ப்பயாமி ।

4. நிதீனாம் ஸர்வரத்னானாம் த்வமனர்க்ய குணாஹ்யஸி ।
ஸ்ம்ஹாஸன ஸ்திதே தேவி க்ருஹாணார்க்யம் நமோஸ்து தே ॥

நிதிகள் யாவையிலும், எல்லா ரத்னங்களிலும் உயர்ந்து நீயே குறையற்ற குணம் நிறை ரத்னமாயுள்ளாய்! சிம்மாஸனத்தில் அமர்ந்துள்ள தேவி! அர்க்கியம் ஏற்று அருளுக! உனக்கு நமஸ்காரம். தீர்த்தத்தை ஸமர்ப்பிக்கவும்.

ஸ்ரீ மீனாக்ஷ்யம்பிகாயை நம: ராஜமாதுங்க்யை நம:
அர்க்கியம் ஸமர்ப்பயாமி ।

5. கற்பூரேண ஸுகந்தேன ஸுரபி ஸ்வாது சீதலம் ।
தோயமாசமநீயார்த்தம் தேவி த்வம் ப்ரதி க்ருஹ்யதாம் ॥

(கற்பூர மணம் வீசும் பால் போன்ற சுவைமிக்கதும், குளிர்ந்ததுமான தீர்த்தத்தை ஆசமநீயத்தின் பொருட்டு ஸமர்ப்பிக்கிறேன். ஏற்றருள்க.)

ஸ்வர்ண பத்மினீ தடாவாஸின்யை நம: ।
ஆசமனீயம் ஸமர்ப்பயாமி ।

தீர்த்தத்தை ஸமர்ப்பிக்கவும்.

6. மந்தாகின்யா ஸமாநீதைர் ஹேமாம் போருஹ வாஸிதை: ।
ஸ்நானம் குருஷ்வ தேவேசி ஸலிலைச்ச ஸுகந்திபி : ॥

மந்தாகினியிலிருந்து கொணரப்பட்டதும், தங்கத் தாமரை மணம் வீசுவதும், மணமுள்ளதுமான தீர்த்தத்தினால் நீராடுக ஹே தேவி!)

– தீர்த்தத்தை சேர்ப்பிக்கவும்.

7. பட்ட கூலயுகம் தேவி கஞ்சுகேன ஸமன்விதம் ।
பரிதேஹி க்ருபாம் க்ருத்வா ஸர்வ ஸம்பத் ப்ரதாயினி ॥

(பட்டால் நெய்யப்பட்டதும், மேற்கச்சுடன் கூடியதுமான இந்த மென்மையான அழகிய பட்டாடையை கருணை கூர்ந்து ஏற்றுக் கொள்ளுக அனைத்துச் செல்வங்களும் அருள்பவளே.)

- புஷ்பத்தை அர்ச்சிக்கவும்.

அருணாருண வஸ்த்ர பாஸ்வத் கடீ தட்யை நம: ।
வஸ்த்ரார்த்தம் புஷ்பம் ஸமர்ப்பயாமி ॥

8. ஸ்வர்ண ஸூத்ரமயம் திவ்யம் ப்ரஹ்மணா நிர்மிதம் புரா ।
உபவீதம் மயா தத்தம் க்ருஹாண பரமேச் வரி ॥

(தங்க இழையால் அமைந்ததும் பிரம்மனால் முன்னர் செய்யப்பட்டதும், என்னால் ஸமர்ப்பிக்கப்பட்டதுமான இந்த உபவீதத்தை (பூணூலை) வேற பரமேச்வரி ஏற்றுக் கொள்ளுவாயாக.)

- புஷ்பத்தை அர்ச்சிக்கவும்.

வேதமார்க நிரதாயை நம: உபவீதம் ஸமர்ப்பயாமி ।

9. ஸ்ரீ கண்ட சந்தனம் திவ்யம் கந்தாட்யம் ஸுமனோஹரம் ।
விலேபனஞ்ச தேவேசி சந்தனம் ப்ரதி க்ருஹ்யதமாம் ॥

(குளிர்ந்த, மணமுடைய, மனத்தை ஈர்க்கும் பரிமளமிகுந்த ஸ்ரீ கண்ட சந்தனத்தை ஹே தேவி! உனக்குத் திருமேனியில் பூசுகிறேன். ஏற்றருளுக.)

- சந்தனம் சாத்தவும்.

புஷ்ய க[3]ந்தா[4]யை நம: கந்தம் ஸமர்ப்பயாமி ।

10. ஹரித்ரா குங்குமஞ்சைவ ஸிந்தூரம் கஜ்ஜலம் ததா ।
ஸௌபாக்ய த்ரவ்ய ஸம்யுக்தம் க்ருஹாண பரமேச்வரி ॥

(மஞ்சள் குங்குமம், ஸிந்தூரமும், கண்மையும், இன்னும் ஸௌபாக்யப் பொருட்கள் யாவும் தருகிறேன். சூடிக்கொள்ளவும். ஹே பரமேச்வரி!)

- புஷ்பத்தை சமர்ப்பிக்கவும், குங்குமம் ஸமர்ப்பிக்கவும்.

ஸிந்தூர திலகாஞ்சிதாயை நம: ஸகல ஸௌபாக்ய த்ரவ்யாணி குங்குமம் ச ஸமர்ப்பயாமி, கேசாலங்காரம் ச கல்பயாமி நம: ।

11. அக்ஷதான் நிர்மலான் ஷத்தான் முக்தாமணி ஸமன்விதான் ।
க்ருஹாணேமான் மஹா தேவி தேஹி மே நிர்மலாம் தியம் ॥

(பரிசுத்தமான, முத்து மணிகளால் ஆன, முனை முறியாத

அக்ஷதையை இதோ அர்ப்பிக்கிறேன். ஹே மஹாதேவி! ஏற்றருள்க என்னுடைய அறிவை அழுக்கற்றதாக ஆக்கிடுக!

– அக்ஷதையை ஸமர்ப்பிக்கவும்.

சாச்வதாயை நம: நித்யாயை நம: அக்ஷதான் ஸமர்ப்பயாமி

12. மாங்கல்ய மணி ஸம்யுக்தம் முக்தா பல ஸமன்விதம் ।
தத்தம் மங்கல சூத்ரம் தே3 க்ருஹாண சிவ வல்லபே4 ॥

(மாங்கல்ய மணியுடன் கூடியதும், பருத்த முத்துக்களால் அமைந்த வடமாய் உள்ளதுமான மங்கல சூத்திரத்தை ஸமர்ப்பிக்கிறேன். ஹே சிவ நாயகியே! இதனை மகிழ்வுடன் அணிந்தருள்க)

ஸ்ரீ சிவ வல்லபாயை நம: மங்கள சூத்திரம் (கண்டஸ்த்திரம்) ஸமர்ப்பயாமி ।

13. ரத்ன தாடங்க கேயூர ஹார கங்கண மண்டிதே ।
பூ4ஷணம் க்ருஹ்யதாம் தேவி நமஸ்தே பாண்ட்ய நந்தினி ॥

(திருமுடி முதல் திருவடிவரை ரத்ன கிரீட, தாடங்க, தோள்வளைகள், மாலைகள், கைவளைகள் முதலிய நாநாவிதமான பூஷணங்களை அணிந்துள்ள ஹே பாண்டிய ராஜகுமாரி நான் அணிவிக்கும் இந்த ஆபரணங்களை ஏற்றருள்க)

- புஷ்பத்தை அர்ச்சிக்கவும்.

நாநாப4ரண ஸமன்விதாயை நம: நாநாப4ரண பூ4ஷிதாயை நம: ।

மகுடாதி பாதகடக பர்யந்தம் விவிதாபரணானி ஸமர்ப்பயாமி ॥

14. ஜாஜீ புந்நாக மந்தார, கேதகீ சம்பகானி ச ।
புஷ்பாணி தவ பூஜார்த்தம் அர்ப்பயாமி ஸதாசிவே ॥

(பிச்சி, புன்னை, மந்தாரை, தாழை சம்பகம், மல்லி, தாமரை, மகிழம், மரிக்கொழுந்து, அரளி, முல்லை, வெட்டிவேர், செங்கழுநீர், ஜவந்தி, பாரிஜாதம், மாசிப்பச்சை, மரு போன்ற எல்லா வாசனை மலர்களையும் உன பூஜையின் பொருட்டு ஹே ஸதாசிவே! அர்ப்பிக்கிறேன்)

ஸௌகந்திக லஸத் கசாயை நம: புஷ்பமாலாம் ஸமர்ப்பயாமி ।

– புஷ்பமாலையை சாத்தவும்.

அதாங்க பூஜை

திருவிளக்கை தேவியின் திருவடிவாய்க் கண்டு கால் முதல் தலை வரை வழிபடுதல்.

ராஜ மாதங்க்யை நம: பாதௌ பூஜயாமி ॥
– பாதங்களில் மலரிடுக

காத்யாயன்யை நம: ஜங்கே பூஜயாமி ॥
– கணுக்காலில் மலரிடுக

மங்களாயை நம: ஜானுனீ பூஜயாமி ॥
– முழங்காலில் மலரிடுக

ஹைம வத்யை நம: ஊரூ பூஜயாமி ॥
– தொடையில் மலரிடுக

ஈச்வர்யை நம: கடிம் பூஜயாமி ॥
– இடுப்பில் மலரிடுக

சிவ ப்ரியாயை நம: நாபிம் பூஜயாமி ॥
– நாபிக் கமலத்தில் மலரிடுக

பவதாயை நம: உதரம் பூஜயாமி ॥
– திருவயிற்றில் மலரிடுக

க்ஷமாயை நம: ஹ்ருதயம் பூஜயாமி ॥
– இதயத்தில் மலரிடுக

கௌமார்யை நம: ஸ்தானம் பூஜயாமி ॥
– திருமார்பில் மலரிடுக

மஹா கௌர்யை நம: தக்ஷபாஹூம் பூஜயாமி ॥
– வலது தோளில் மலரிடுக

வைஷ்ணவ்யை நம: வாமபாஹூம் பூஜயாமி ॥
– இடது தோளில் மலரிடுக

ரமாயை நம: ஸ்கந்தௌ பூஜயாமி ॥
– திருத்தோள்களில் மலரிடுக

அபர்ணாயை நம: கண்டம் பூஜயாமி ॥
– திருக்கழுத்தில் மலரிடுக

ஸ்கந்த மாத்ரே நம: முகம் பூஜயாமி ॥
– திருமுகத்தில் மலரிடுக

சண்டிகாயை நம: நேத்ரே பூஜயாமி ॥
– திருக்கண்களில் மலரிடுக

கிரிஜாயை நம: லலாடம் பூஜயாமி ॥
– நெற்றியில் மலரிடுக

பாண்ட்ய குமார்யை நம: சிர: பூஜயாமி ॥
– தலையில் மலரிடுக

மலயத்துவஜ பாண்டிய காஞ்சன மாலாத் மஜாயை நம:
ஸர்வாண்யங்கானி பூஜயாமி ॥

(எல்லா அங்கங்களிலும் மலரிட்டு அர்ச்சிக்கவும்)

ஸ்ரீ மீனாக்ஷி அஷ்டோத்தர சத நாமாவளி

அர்ச்சனை செய்யும் முறை

வலதுகை ஆள்காட்டி விரல் தவிர இதர விரல்களால், குங்குமத்தையும், மலர்களையும், அட்சதையையும் எடுத்து திருவிளக்கின் அடிபாகத்தை அம்பிகையின் பாதார விந்தங்களாக பாவித்து அர்ச்சனை செய்ய வேண்டும். முதலில் பூ, பிறகு குங்குமம், பிறகு அக்ஷதை என மூன்றையும் தனித்தனியாக எடுத்து அர்ச்சிக்க வேண்டும்.

1. ஓம் ஸ்ரீ மாதாங்க்யை நம:
2. ஓம் விஜயாயை நம:
3. ஓம் ச்யாமாயை நம:
4. ஓம் சசி வேஸ்யை நம:
5. ஓம் சுக ப்ரியாயை நம:
6. ஓம் நீப ப்ரியாயை நம:
7. ஓம் கதம் பேஸ்யை நம:
8. ஓம் மத கூர்தணித லோசனாயை நம:
9. ஓம் பக்தானு ரக்தாயை நம:
10. ஓம் மந்த்ரேச்யை நம:
11. ஓம் புஷ்பிண்யை நம:
12. ஓம் மந்த்ரிண்யை நம:
13. ஓம் சிவாயை நம:
14. ஓம் கலாவத்யை நம:
15. ஓம் ரக்த வஸ்த்ராயை நம:
16. ஓம் அபிராமாயை நம:
17. ஓம் ஸ்மத்யமாயை நம:
18. ஓம் த்ரிகோண மத்ய நிலயாயை நம:
19. ஓம் சாரு சந்த்ராவ தம்ஸின்யை நம:
20. ஓம் ரஹ: பூஜ்யாயை நம:
21. ஓம் ரஹ: கேள்யை நம:
22. ஓம் யோனி ரூபாயை நம:
23. ஓம் மஹேஷ்வர்யை நம:
24. ஓம் பக ப்ரியாயை நம:
25. ஓம் பகாராத்யாயை நம:
26. ஓம் ஸ்பகாயை நம:
27. ஓம் பகமாலின்யை நம:
28. ஓம் ரதி ப்ரியாயை நம:
29. ஓம் சதுர் பாஹவே நம:

30. ஓம் ஸ்வேண்யை நம:
31. ஓம் சாருஹாஸின்யை நம:
32. ஓம் மது ப்ரியாயை நம:
33. ஓம் ஸ்ரீ ஜனன்யை நம:
34. ஓம் சர்வாண்யை நம:
35. ஓம் சிவாத்மிகாயை நம:
36. ஓம் ராஜ்ய லக்ஷ்மீ ப்ரதாயை நம:
37. ஓம் நித்யாயை நம:
38. ஓம் நீபோத்யான நிவாஸின்யை நம:
39. ஓம் வீணா வத்யை நம:
40. ஓம் கம்பு கண்ட்யை நம:
41. ஓம் காமேச்யை நம:
42. ஓம் யக்ஞ ரூபிண்யை நம:
43. ஓம் ஸங்கீத ரஸிகாயை நம:
44. ஓம் நாத ப்ரியாயை நம:
45. ஓம் நீலோத்பல த்யுத்யை நம:
46. ஓம் மதங்க தநயாயை நம:
47. ஓம் லக்ஷ்ம்யை நம:
48. ஓம் வ்யா பின்யை நம:
49. ஓம் ஸர்வ ரஞ்ஜன்யை நம:
50. ஓம் திவ்ய சந்தன திக்தாங்க்யை நம:
51. ஓம் யாவகார்த்ர பதாம்புஜாயை நம:
52. ஓம் கஸ்தூரி திலகாயை நம:
53. ஓம் ஸ்ப்ருவே நம:
54. ஓம் பிம்போஷ்ட்யை நம:
55. ஓம் மதாலஸாயை நம:
56. ஓம் வித்யா ராக்ஞ்யை நம:
57. ஓம் பகவத்யை நம:
58. ஓம் ஸ்தா பானாநு மோதின்யை நம:
59. ஓம் சங்க தாடங்கின்யை நம:
60. ஓம் குஹ்யாயை நம:
61. ஓம் யோஷித் புருஷி மோஹின்யை நம:
62. ஓம் கிங்கரி பூத கிர்வாண்யை நம:
63. ஓம் கௌலின்யை நம:
64. ஓம் அக்ஷர ரூபிண்யை நம:
65. ஓம் வித்யுத் கபோலபலிகாயை நம:
66. ஓம் முக்தா ரத்ன விபூஷிதாயை நம:
67. ஓம் ஸ்நாஸாயை நம:
68. ஓம் தனு மத்யாயை நம:
69. ஓம் ஸ்ரீ வித்யாயை நம:

70. ஓம் புவனேஷ்வர்யை நம:
71. ஓம் ப்ருது ஸதன்யை நம:
72. ஓம் ப்ரும்ஹ வித்யாயை நம:
73. ஓம் ஸ்தா ஸாகர வாஸின்யை நம:
74. ஓம் குஹ்ய வித்யாயை நம:
75. ஓம் அனவத்யாங்க்யை நம:
76. ஓம் யந்த்ரிண்யை நம:
77. ஓம் ரதி லோலுபாயை நம:
78. ஓம் த்ரைலோக்ய ஸுந்தர்யை நம:
79. ஓம் ரம்யாயை நம:
80. ஓம் ஸ்ரக்விண்யை நம:
81. ஓம் கீர தாரிண்யை நம:
82. ஓம் ஆத்மைக்ய ஸ்முகீ பூத ஜகதாஹ்லாத காரிண்யை நம:
83. ஓம் கல்பாதீதாயை நம:
84. ஓம் குண்டலின்யை நம:
85. ஓம் கலாதராயை நம:
86. ஓம் மனஸ்வின்யை நம:
87. ஓம் அசிந்த்யானந்த விபவாயை நம:
88. ஓம் ரத்ன ஸிம்ஹாஸ நேச்வர்யை நம:
89. ஓம் பத்மாஸனாயை நம:
90. ஓம் கமலாலயாயை நம:
91. ஓம் ஸ்வயம்பு குஸும ப்ரியாயை நம:
92. ஓம் கல்யாண்யை நம:
93. ஓம் நித்ய புஷ்பாயை நம:
94. ஓம் சாம்பவ்யை நம:
95. ஓம் வரதாயின்யை நம:
96. ஓம் ஸர்வ வித்யாப்ரதா வாச்யாயை நம:
97. ஓம் குஹ்யோபநிஷ துத்தமாயை நம:
98. ஓம் ந்ருப வச்ய கர்யை நம:
99. ஓம் போக்த்ரியை நம:
100. ஓம் ஜகத் ப்ரயக்ஷ ஸாக்ஷிண்யை நம:
101. ஓம் ப்ரம்ஹ விஷ்ணு வீச ஜனன்யை நம:
102. ஓம் ஸர்வ ஸௌபாக்ய தாயின்யை நம:
103. ஓம் குஹ்யாதி குஹ்ய கோப்த்ரியை நம:
104. ஓம் நித்ய க்லின்னாயை நம:
105. ஓம் அம்ருதோத் பவாயை நம:
106. ஓம் கைவல்ய தாத்ரியை நம:
107. ஓம் வசின்யை நம:
108. ஓம் ஸர்வஸம்பத் ப்ரதயின்யை நம:
ஓம் பவஸ்ய தேவஸ்ய பத்னியை நம:

ஓம் சர்வஸ்ய தேவஸ்ய பத்னியை நம:
ஓம் ஈசானஸ்ய தேவஸ்ய பத்னியை நம:
ஓம் பசுபதே தேவஸ்ய பத்னியை நம:
ஓம் உக்ரஸ்ய தேவஸ்ய பத்னியை நம:
ஓம் ருத்ரஸ்ய தேவஸ்ய பத்னியை நம:
ஓம் பீமஸ்ய தேவஸ்ய பத்னியை நம:
ஓம் மஹதோ தேவஸ்ய பத்னியை நம:
ஓம் ச்யாமளாம் பிகாயை நம:
ஓம் ஸ்ரீ மீனாக்ஷ்யம்பிகாயை நம:
ஓம் ஸ்ரீ ராஜ ராஜேஷ்வர்யை நம:
ஓம் ஸ்ரீ லலிதா மஹா த்ரிபுர ஸுந்தரீ ஸ்வரூபிணீ
ஓம் மீனாக்ஷி பரமேச்வரி பரதேவதாம்பிகாயை நம:

மீனாக்ஷி 108 போற்றி அர்ச்சனையும் செய்யவும்.

108 மீனாட்சி அம்மன் போற்றி

1. ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி
2. ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
3. ஓம் அருமறையின் வரம்பே போற்றி
4. ஓம் அறம் வளர்க்கும் அம்மையே போற்றி
5. ஓம் அரசிளங்குமரியே போற்றி
6. ஓம் அப்பர் பிணிமருந்தே போற்றி
7. ஓம் அமுத நாயகியே போற்றி
8. ஓம் அருந்தவ நாயகியே போற்றி
9. ஓம் அருள்நிறை அம்மையே போற்றி
10. ஓம் ஆலயவாய்க் கரசியே போற்றி
11. ஓம் ஆறுமுகத்தின் அன்னையே போற்றி
12. ஓம் ஆதியின் பாதியே போற்றி
13. ஓம் ஆலால சுந்தரியே போற்றி
14. ஓம் ஆனந்த வல்லியே போற்றி
15. ஓம் இளவஞ்சிக் கொடியே போற்றி
16. ஓம் இமயத் தரசியே போற்றி
17. ஓம் இடபத்தோன் துணையே போற்றி
18. ஓம் ஈசுவரியே போற்றி
19. ஓம் உயிர் ஓவியமே போற்றி
20. ஓம் உலகம்மையே போற்றி
21. ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
22. ஓம் எண்திசையும் வென்றோய் போற்றி

23. ஓம் ஏகன் துணையே போற்றி
24. ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
25. ஓம் ஐயந் தீர்ப்பாய் போற்றி
26. ஓம் ஒப்பிலா அமுதே போற்றி
27. ஓம் ஓங்கார சுந்தரியே போற்றி
28. ஓம் கற்றோர்க் கினியோய் போற்றி
29. ஓம் கல்லார்க்கும் எளியோய் போற்றி
30. ஓம் கடம்பவன சுந்தரியே போற்றி
31. ஓம் கல்யாண சுந்தரியே போற்றி
32. ஓம் கனகமணிக்குன்றே போற்றி
33. ஓம் கறபின் அரசியே போற்றி
34. ஓம் கருணையூற்றே போற்றி
35. ஓம் கல்விக்கு வித்தே போற்றி
36. ஓம் கனகாம் பிகையே போற்றி
37. ஓம் கதிரொளிச் சுடரே போற்றி
38. ஓம் கற்பனை கடந்த கற்பகமே போற்றி
39. ஓம் காட்சிக் கினியோய் போற்றி
40. ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி
41. ஓம் கிளியேந்திய கரத்தோய் போற்றி
42. ஓம் குலச்சிறை காத்தோய் போற்றி
43. ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி
44. ஓம் கூடற்கலாபமயிலே போற்றி
45. ஓம் கூடல்நாயகியே போற்றி
46. ஓம் கோலப் பசுங்கிளியே போற்றி
47. ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி
48. ஓம் சக்தி வடிவே போற்றி
49. ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி
50. ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
51. ஓம் சித்தந் தெளிவிப்பாய் போற்றி
52. ஓம் சிவயோக நாயகியே போற்றி
53. ஓம் சிவானந்த வல்லியே போற்றி
54. ஓம் சிங்கார வல்லியே போற்றி
55. ஓம் செந்தமிழ்த்தாயே போற்றி
56. ஓம் செல்வத்துக்கரசியே போற்றி
57. ஓம் சேனைத் தலைவியே போற்றி
58. ஓம் சொக்கர் நாயகியே போற்றி
59. ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தோய் போற்றி
60. ஓம் ஞானாம்பிகையே போற்றி
61. ஓம் ஞானப் பூங்கோதையே போற்றி
62. ஓம் தமிழர் குலச் சுடரே போற்றி



63. ஓம் தண்டமிழ்த் தாயே போற்றி
64. ஓம் திருவுடையம்மையே போற்றி
65. ஓம் திசையெல்லாம் புரந்தாய் போற்றி
66. ஓம் திரி புர சுந்தரியே போற்றி
67. ஓம் திரி நிலை நாயகியே போற்றி
68. ஓம் தீந்தமிழ்ச் சுவையே போற்றி
69. ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
70. ஓம் தென்னவன் செல்வியே போற்றி
71. ஓம் தேன்மொழி யம்மையே போற்றி
72. ஓம் தையல் நாயகியே போற்றி
73. ஓம் நற்கனியின் சுவையே போற்றி
74. ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
75. ஓம் நல்ல நாயகியே போற்றி
76. ஓம் நீலாம்பிகையே போற்றி
77. ஓம் நீதிக்கரசியே போற்றி
78. ஓம் பக்தர்தம் திலகமே போற்றி
79. ஓம் பழமறையின் குருந்தே போற்றி
80. ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
81. ஓம் பண்ணமைந்த சொல்லே போற்றி
82. ஓம் பவளவாய்க் கிளியே போற்றி
83. ஓம் பல்லுயிரின் தாயே போற்றி
84. ஓம் பசுபதி நாயகியே போற்றி
85. ஓம் பாகம்பிரியா அம்மையே போற்றி
86. ஓம் பாண்டிமா தேவியின் தேவே போற்றி
87. ஓம் பார்வதி அம்மையே போற்றி
88. ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
89. ஓம் பெரிய நாயகியே போற்றி
90. ஓம் பொன்மயிலம்மையே போற்றி
91. ஓம் பொற்கொடி அன்னையே போற்றி
92. ஓம் மலையத்துவசன் மகளே போற்றி
93. ஓம் மங்கல நாயகியே போற்றி
94. ஓம் மழலைக் கிளியே போற்றி
95. ஓம் மனோன்மணித் தாயே போற்றி
96. ஓம் மண்சுமந்தோன் மாணிக்கமே போற்றி
97. ஓம் மாயோன் தங்கையே போற்றி
98. ஓம் மாணிக்க வல்லியே போற்றி
99. ஓம் மீனவர்கோன் மகளே போற்றி
100. ஓம் மீனாட்சி யம்மையே போற்றி
101. ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி
102. ஓம் முக்கண்சுடர் விருந்தே போற்றி

103. ஓம் யாழ்மொழியம்மையே போற்றி
104. ஓம் வடிவழகம்மையே போற்றி
105. ஓம் வேலவனுக்கு வேல்தந்தோய் போற்றி
106. ஓம் வேதநாயகியே போற்றி
107. ஓம் வையகம் வாழ்விப்பாய் போற்றி
108. ஓம் அம்மையே அம்பிகையே போற்றி போற்றி
ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி போற்றி

திருவிளக்கு போற்றி

1. பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி
2. போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி
3. முற்றறிவு ஒளியாய் மிளிர்ந்தாய் போற்றி
4. மூவுலகம் நிறைந்திருந்தாய் போற்றி
5. வரம்பில் இன்பமாய் வளர்ந்திருந்தாய் போற்றி
6. இயற்கையாய் அறிவொளி ஆனாய் போற்றி
7. ஈரேழுலகம் ஈன்றாய் போற்றி
8. பிறர்வயமாகாப் பெரியோய் போற்றி
9. பேரின்பப் பெருக்காய் பொலிந்தாய் போற்றி
10. பேரருட் கடலாம் பொருளே போற்றி
11. முடிவில் ஆற்றல் உடையாய் போற்றி
12. மூவுலகம் தொழ மூத்தோய் போற்றி
13. அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
14. ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி
15. ஓம் எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
16. இருள் கெடுத்து இன்பருள் எந்தாய் போற்றி
17. மங்கள நாயகி மாமணி போற்றி
18. வளமை நல்கும் வல்லியே போற்றி
19. அறம்வளர் நாயகி அம்மையே போற்றி
20. மின் ஒளி அம்மையாம் விளக்கே போற்றி
21. மின் ஒளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
22. தையல் நாயகித் தாயே போற்றி
23. தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
24. முக்கட்சுடரின் முதல்வி போற்றி
25. ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி
26. சூடாமணியே சுடரொளியே போற்றி
27. இருள் ஒழித்து இன்பம் ஈவோய் போற்றி
28. அருள் பொழிந்து எம்மை ஆள்வோய் போற்றி
29. அறிவினுக்கு அறிவாய் ஆனாய் போற்றி
30. இல்லக விளக்காம் இறைவி போற்றி
31. சுடரே விளக்காம் தூயோய் போற்றி

32. இடரைக்களையும் இயல்பினாய் போற்றி
33. எரிசுடராய் நின்ற இறைவி போற்றி
34. ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் போற்றி
35. அருமறைப் பொருளாம் ஆதி போற்றி
36. தூண்டு சுடரனைய ஜோதி போற்றி
37. ஜோதியே போற்றிச் சுடரே போற்றி
38. ஓதும் உள்ஒளி விளக்கே போற்றி
39. இருள் கெடுக்கும் இல்லக விளக்கே போற்றி
40. சொல்லக விளக்காம் ஜோதியே போற்றி
41. பலர்காண் பல்லக விளக்கே போற்றி
42. நல்லக நமச்சிவாய விளக்கே போற்றி
43. உலப்பிலா ஒளிவளர் விளக்கே போற்றி
44. உணர்வுசூழ் கடந்ததோர் விளக்கே போற்றி
45. உடம்பெனும் மனையக விளக்கே போற்றி
46. உள்ளத்தகழி விளக்கே போற்றி
47. மடம்படும் உணர்நெய் விளக்கே போற்றி
48. உயிரெனும் திரிமயக்கு விளக்கே போற்றி
49. இடம்படும் ஞானத்தீ விளக்கே போற்றி
50. நோக்குவார்க்கு எரிகொள் விளக்கே போற்றி
51. ஆதியாய் நடுவுமாகும் விளக்கே போற்றி
52. அளவிலா அளவுமாகும் விளக்கே போற்றி
53. ஜோதியாய் உணர்வுமாகும் விளக்கே போற்றி
54. தில்லைப் பொது நட விளக்கே போற்றி
55. கருணையே உருவாம் விளக்கே போற்றி
56. கற்பனை கடந்த ஜோதியே போற்றி
57. அற்புதக் கோல விளக்கே போற்றி
58. அருமறைச் சிரத்து விளக்கே போற்றி
59. சிற்பர வியோம விளக்கே போற்றி
60. பொற்புடன் நடஞ்செய் விளக்கே போற்றி
61. உள்ளத்திருளை ஒழிப்பாய் போற்றி
62. கள்ளப்புலனைந்தும் கரைப்பாய் போற்றி
63. உருகுவோர் உள்ளத்து ஒளியே போற்றி
64. பெருகு அருள்சுரக்கும் பெரும போற்றி
65. இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி
66. அருவே உருவே அருவுரு போற்றி
67. நந்தா விளக்கே நாயகியே போற்றி
68. செந்தாமரைத்தாள் தந்தாய் போற்றி
69. தீபமங்கள ஜோதியே போற்றி
70. மதிப்பவர் மனமணி விளக்கே போற்றி
71. பாகம் பிரியா பராபரையே போற்றி

72. ஆகம முடிமேல் அமர்ந்தோய் போற்றி
73. ஏகமாய் நடஞ்செய் எம்மான் போற்றி
74. ஊழி ஊழி உள்ளோய் போற்றி
75. ஆழியான் காணா ஆடியோய் போற்றி
76. ஆதியும் அந்தமும் அற்றாய் போற்றி
77. அந்தமில் இன்பம் அருள்வோய் போற்றி
78. முந்தைய வினையை முடிப்போய் போற்றி
79. பொங்கும் கீர்த்திப் பூரண போற்றி
80. தண்ணருள் சுரக்கும் தாயே போற்றி
81. அருளே உருவாய் அமைந்தாய் போற்றி
82. இருநில மக்கள் இறைவி போற்றி
83. குருவென ஞானம் கொடுப்பாய் போற்றி
84. ஆறுதல் எமக்கிங்கு அளிப்பாய் போற்றி
85. தீதெல்லாம் தீர்க்கும் திருவே போற்றி
86. பக்தியில் ஆழ்ந்த பரமே போற்றி
87. எத்திக்கும் துதி எந்தாய் போற்றி
88. அஞ்சலென்றருளும் அன்பே போற்றி
89. தஞ்சமென்றவரைச் சார்வோய் போற்றி
90. ஓதுவோர் அகத்துறை ஒளியே போற்றி
91. ஓங்காரத்துள்ளொளி விளக்கே போற்றி
92. எல்லா உலகமும் ஆனாய் போற்றி
93. பொல்லா வினைகள் அறுப்பாய் போற்றி
94. புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் போற்றி
95. செல்வாய செல்வம் தருவாய் போற்றி
96. பூங்கழல் விளக்கே போற்றி
97. உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
98. உயிர்களின் பசிப்பிணி ஒளித்தருள் போற்றி
99. செல்வம் கல்வி சிறப்பருள் போற்றி
100. நல்லன்பு ஒழுக்கம் நல்குவாய் போற்றி
101. விளக்கிட்டார்க்கு மெய் நெறி விளக்குவாய் போற்றி
102. நலம் எலாம் உயிர்க்கு நல்குக போற்றி
103. தாயே நின்னருள் தருவாய் போற்றி
104. தூய நின் திருவடி தொழுதனம் போற்றி
105. போற்றி என்பார் அமரர் விளக்கே போற்றி
106. போற்றி என்பார் மனிதர் விளக்கே போற்றி
107. போற்றி என் அன்புவொலி விளக்கே போற்றி
108. போற்றி போற்றி திருவிளக்கே போற்றி

தூபம் காட்டுதல்

தசாங்க குக்குலம் தூபம் சந்தனாகுரு ஸம்யுதம் ।
ஸமர்ப்பிதம் மயா பக்த்யா மஹா தேவி ப்ரதிக்ருஹ்யதாம் ॥

தசாங்கம், குங்குலியம், சந்தனம், அகில் முதலியவை கலந்த வாசனைப் புகையான தூபத்தை பக்தியால் நான் அர்ப்பணிக்கிறேன். ஹே மஹா தேவி இதனை ஏற்றருளுக.

ஓம் புண்ய கந்தாயை நம: தூபம் ஆக்ராபயாமி ।

தூபம் காட்டவும், ஊதுபத்தி, சாம்பிராணி, மற்றும் தசாங்கம் போன்ற நறுமண பொருட்களை ஏற்றி காட்டுதல்.

தீபம் காட்டுதல்

க்ருத வர்த்தி ஸமாயுக்தம் மஹா தேஜோ மஹோஜ்வலம் ।
தீபம் தாஸ்யாமி தேவேசி ஸ்ப்ரீதா பவ ஸர்வதா ॥

நெய்யில் நனைந்த திரியோடு கூடிய பிரகாசமான தீபத்தை ஹே தேவர்க்கெல்லாம் தலைவியே எப்போதும் திருப்தி அடைந்தவளாக இந்த தீபத்தை ஏற்றருளுக.

ஓம் பரஞ்ஜ்யோத்யை நம: தீபம் தர்சயாமி ।

தீபக்கால் மூலம் அல்லது துணைதீபம் மூலம் தீபம் காட்டவும். நெய் தீபம் ஏற்றுதல் மிக்க நன்று.

நிவேதனம்

நிவேதனத்திற்கு உள்ள அன்னம், பழங்களை வைத்து ஓம் பூர் புவ:ஸ்வ....

என்னும் மந்திரம் கூறி மும்முறை நீரால் சுற்றி

1. ஓம் ப்ராணாய ஸ்வாஹா 2. ஓம் அபானாய ஸ்வாஹா
3. ஓம் வ்யானாய ஸ்வாஹா 4. ஓம் உதானாய ஸ்வாஹா
5. ஓம் ஸமனாய ஸ்வாஹா 6. ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா

(என்று ஆறு தடவை நிவேதனங்களை தேவி உண்பதாக பாவித்து கையால் காட்டி நிவேதிக்கவும்.)

அன்னம் சதுர்விதம் ஸ்வாது ரஸை:ஷட்பி:ஸமன்விதம் ।
நைவேத்யம் க்ருஹ்யதாம் தேவி பக்திம் மே ஹ்யசலாம் குரு ॥

நால் வகை அன்னங்கள், அறு சுவையுடையதுமான நிவேதனங்களை ஏற்றுக்கொள் தேவி, உன்பால் எனக்கு அசையாத பக்தியைத் தருக)

ஸ்ரீ மீனாக்ஷி பரதேவதே மஹா நிவேதனம் நிவேதயாமி ॥

(நிவேதனத்திற்கு சர்க்கரை பொங்கல் இருப்பின்)

பாலில் அன்னமிட்டு
பாகும் பருப்பும் கலந்து
சர்க்கரை பொங்கல் நானும்
அர்ப்பித்தேன் அம்பிகையே

இன்னமுது ஏற்று நீயும்
இன்னருள் புரிவாய் இன்றே

(பழவகைகள், மற்ற பொருட்கள் நிவேதனம் செய்வதென்றால்)

பல்வகை பழங்களையும், பொருட்களையும்
அர்ப்பித்தேன் அம்பிகையே
இவையனைத்தும் ஏற்று நீயும்
இன்னருள் புரிவாய் இன்றே.

மத்யே மத்யே அம்ருத பானீயம் ஸமர்ப்பயாமி ॥

(நிவேதனத்தைச் சமர்ப்பிக்கிறேன். இடையிடையே அம்ருதத்தைப் பருகத்தருகிறேன் என்று கூறி தீர்த்தத்தை அர்ப்பிக்கவும். அமிர்தானமஸி என்று மீண்டும் நீர் வார்க்கவும்.)

ஏலாலவங்க கஸ்தூர் கற்பூரை: புண்ய வாஸிதாம் ।
வீடிகாம் முகவாஸார்த்தம் அர்ப்பயாமி ஸ்ரேச்வரி ॥

ஏலம், கிராம்பு, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம் முதலிய நால்வாசனைகள் சேர்ந்த தாம்பூலப் பட்டியை தங்களது திருவாயின் நறுமணத்தின் பொருட்டு ஹே தேவர்தம் தேவியே உனக்கு சமர்ப்பிக்கிறேன்.

ஓம் புண்ய கந்தாயை நம: கற்ப்பூர வீடிகாம் ஸமர்ப்பயாமி

கற்பூர நீராஜனம்

(கற்பூர தீப ஆராதனை செய்தல்)
நீராஜனம் ஸுமாங்கல்யம் கோடி ஸூர்ய ஸமப்ரம் ।
அஹம் பக்த்யா ப்ரதாஸ்யாமி தேவி ஸ்வீகுருஷ்வ தயாநிதே ॥
திங்களில் ஜோதி நீ, தினகரன் ஜோதி நீ
அங்கியில் ஜோதி நீ, அனைத்திலும் ஜோதி நீ
எங்களுள் ஜோதி நீ, ஈசுவர ஜோதி நீ
அங்கிலா ஜோதி நீ, கற்பூர ஜோதியே

(கற்பூர தீபாராதனை காண்பித்து புஷ்பத்தை எடுத்துக் கொண்டு கற்பூரத்தை சுற்றி அம்பாள் சரணங்களில் சேர்ப்பித்து வணங்கவும்.)

ஸர்வ மங்கள அவாப்த்யர்த்தம் ஸமஸ்தாபராத க்ஷமாபணார்த்தம் ।
கற்பூர நீராஜனம் ஸமர்ப்பயாமி ।
மந்தார பாரிஜாதாதி பாட கேதகானிச ।
ஜாதீ சம்பக புஷ்பாணி க்ருஹாணேமானி சோபனே ।

(மந்தாரம் பாரிஜாதம், பாதிரி, தாழை, பிச்சி, சம்பகம் முதலிய பல்வேறு மலர்களை இட்டு அஞ்சலி செய்கிறேன். மங்களம் தரும் அம்பிகே இவற்றை ஏற்றருள்க!)

வலம் வந்து நமஸ்காரித்தல்

பிரதக்ஷிண நமஸ்காரான் ஸமர்ப்பயாமி ।
ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே ।
சரண்யே த்ரியம்பகே கௌரி நாராயணி நமோஸ்து தே ॥

எல்லா மங்கலங்களுக்கும் காரணமான மங்கள
ரூபிணியே ஹேசிவே, அனைத்துச் செல்வங்களையும்
ஈடேற்றித் தருபவளே, அண்டினவரை ஆண்டருளும்
முக்கண் அம்மையே, ஹேகௌரி, ஹே நாராயணி இந்த
நமஸ்காரம் உனக்கு உரித்தாகுக.

(விருப்பம் போல துதிகள் பாடி வணங்குக)

கரும்பு முரல் கடிமலர்ப் பூங்குழல் போற்றி
உத்தரியத் தொடித் தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி
கவுணியர்க்குப் பால் சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனம் குழைத்து என்னை யெடுத்தாண்ட அங்கயற்கண்
எம்பிராட்டி அரும்பும் இளநகை போற்றி
ஆரண நூபுரம் சிலம்பும் அடிகள் போற்றி

– திருவிளையாடற் புராணம்

புஷ்பாஞ்சலி

கையில் புஷ்பத்தையும் தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு செய்த பூஜையை தேவியிடம் சமர்ப்பித்தல்.

சாதுவா அஸாதுவா கர்ம யத்யத் ஆசரிதம் ஷிவே ।
தத்ஸர்வம் க்ருபயா தேவி க்ருஹாண ஆராதனம் ந: ॥

(சரியாகவோ அல்லது சரியில்லாமலோ நாங்கள் என்னென்ன செயல்கள் செய்தோமோ அவையனைத்தையும் ஹே சிவே! கருணையுடன் ஏற்றருள்க!)

ஞானதோ அக்ஞானதோ வாபி யந்மயாசரிதம் ஷிவே ।
தவ க்ருதயம் இதி க்ஞாத்வா க்ஷமஸ்வ பரமேஷ்வரி ॥

(அறிந்தோ அறியாமலோ நான் செய்த அனைத்துச் செயல்களையும் உன் பாதத்தில் அர்ப்பிக்கிறேன். உன் செயலாய் அவற்றைக் கருதிப் பொருத்தருள்வாயாக)
தேவியை வணங்கி மனமொழி மெய்யை அவளுடன் இணைத்து அம்பிகையே அனைத்தும் என்று சமர்ப்பணம் செய்க.

புஷ்பாஞ்சலிம் ஸமர்ப்பயாமி ।
நமஸ்காரம் செய்யவும்.

தீபத்திலிருந்து அம்பாளுக்கு விடையளித்தல்

அஸ்மாத் தீபாத் ஸ்ரீ மீனாக்ஷ்யம்பிகாம் க்ருஹே ப்ரவேஷயாமி ॥

(என்று புஷ்ப அக்ஷதையை தீபத்தின் பாதத்திலிட்டு தீபத்தைக் கிழக்கு திக்காக நகர்த்தவும். பின்னர் தீர்த்தம், குங்குமம், மலர் பிரசாதங்களை எடுத்துக் கொள்ளவும். பிறகு சுமங்கலிக்கு வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம், குங்குமம், மஞ்சள், தக்ஷிணைகளை முடிந்தவரை கொடுப்பது நலம் தரும் மங்கலச் செயல். அசமனம் செய்து பூஜையை சம்பூர்ணம் செய்யவும்.

சாந்தி மந்திரம்

ஓம் த்யௌ சாந்தி । அந்தரி க்ஷகும் சாந்தி ।
ப்ருத்வி சாந்தி । ஆப: சாந்தி ।
ஓஷதாய: சாந்தி । வனஸ்பதய:சாந்தி ।
விஸ்வே தேவா: சாந்தி: ப்ரஹ்ம சாந்தி:
ஸர்வம் சாந்தி : சாந்திரேவ சாந்தி:
ஸாமா சாந்திரேதி ஸ் சாந்திர்பவது
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

விண்ணுலகிலும் அமைதி. மண்ணுலகிலும் அமைதி.
இடையிலும் அமைதி. அண்டங்களிலும் அமைதி.
பரம் பொருளில் அமைதி. எங்கும் அமைதி.
எதிலும் அமைதி எங்கும் நிறைவான அமைதி பரவட்டும்.

ஓம் ஸர்வேஷாம் ஸ்வஸ்திர் பவது
ஓம் ஸர்வேஷாம் ஸாந்திர் பவது
ஓம் ஸர்வேஷாம் பூரணம் பவது
ஓம் ஸர்வேஷாம் மங்களம் பவது

ஓம் எல்லோரும் நலம் பல அடையட்டும்
எல்லோருக்கும் அமைதி கிட்டட்டும்
எல்லோருக்கும் நிறைவு நிறையட்டும்
எல்லோருக்கும் செழுமை செழிக்கட்டும்.

ஸர்வே பவந்து ஸ்கின: ஸர்வே சந்து நிராமயா:
ஸர்வே பத்ராணி பஷ்பந்து மாகஸ்சித் துக்க பாக் பவேத்
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

எல்லோரும் இன்புற்று
எல்லோரும் திருப்தியுடன் வாழ்க

எல்லோரும் நல்லவைகளை காண்க
சிறிதும் துக்கமில்லாது வாழ்க
அமைதி, அமைதி, அமைதி

எல்லா நலன்களும் நிறைந்த வாழ்வை தேவி அருளப் பிரார்த்திப்போமாக.

சுபம்.

ஹிந்துக்களின் கடமைகள்

தினசரி கடமைகள்

1. தினசரி சூரியன் உதிப்பதற்கு முன் எழ வேண்டும்.
2. காலையில் எழும்போதும், குளித்த பின்னும், உணவு அருந்தும் முன்னும், இரவு உறங்குவதற்கு முன்னும் கடவுளை வணங்க வேண்டும்.
3. நெற்றியில் திருநீறு, குங்குமம், சந்தனம், திருமண் ஏதேனும் ஒன்று கட்டாயம் இட்டுக் கொள்ள வேண்டும்.
4. வீட்டில் பூஜைக்கு என்று தனி இடமோ, தனி அறையோ, ஒதுக்கி கடவுளை காலை, மாலை அவசியம் விளக்கு ஏற்றி, ஊதுபத்தியோ, கற்பூரமோ காட்டி தொழ வேண்டும்.
5. தினசரி சிறிது நேரம் ஒதுக்கி, நமது சமய நூல்களைப் படிக்க வேண்டும்.
6. நலிந்த நமது சகோதரர்களுக்கு ஏதேனும் வகையில் சிறு உதவியாவது செய்ய வேண்டும்.
7. தினசரி விடியற்காலையோ, இரவிலோ தியானம் செய்ய வேண்டும்.
8. தினசரி பசுவிற்கு கைப்பிடியாவது ஏதாவது உண்ணக் (வைக்கோலோ, அகத்திக்கீரையோ, தண்ணீரோ) கொடுத்து தொழ வேண்டும்.
9. தினசரி கோயிலுக்குச் செல்ல வேண்டும்.
10. கோயிலுக்குச் செல்லும் போது கோவிலில் பூஜைக்கு உரிய ஏதாவது பொருளை எடுத்துச் செல்ல வேண்டும்.
11. தினசரி ஒரு வேளையாவது குடும்பத்துடன் சேர்ந்து சாப்பிட வேண்டும்.
12. தினசரி விடியற்காலையும், மாலையும் நல்ல பக்திப்பாடல்கள், ஸ்லோகங்கள் சொல்லவும். (ஒலி நாடா போட்டு கேட்கலாம். வழிபாட்டு நேரத்தில் தொலைக்காட்சியை தவிர்க்கவும்)
13. தினசரி காக்கைக்கு உணவு இட்டபின் உணவு உண்க.

வாரக் கடமைகள்

1. வாரம் ஒரு முறையாவது (பிரதி வெள்ளிக்கிழமை) குடும்பத்துடன் கோவிலுக்கு சென்று வரவும்.

2. வாரம் ஒரு நாள் பஜனை, கதாகாலட்சேபம், ஆன்றோர்களின் சொற்பொழிவு, இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டும்.

3. ஆதரவு அற்ற இல்லங்களில், மருத்துவமனையில் உள்ள ஏழை நோயாளிக்கும் திருக்கோவில் பிரசாதங்கள் வழங்கி அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்தல்.

மாதக் கடமைகள்

1. மாதமொருமுறை அருகில் உள்ள ஞானிகள், துறவிகள், மடாதிபதிகள் போன்ற சான்றோர்களை தரிசித்து ஆசி பெறுதல்.

2. நமது வீடுகளில் மாதம் ஒரு முறை அனைவரையும் அழைத்து பஜனை போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி கூட்டு வழிபாடுகள் நடத்துதல்.

3. வெளியூரில் உள்ள முக்கியமான திருக்கோவில்களுக்கு சென்று வருதல்.

ஹிந்து ஆலயப் பாதுகாப்பு இயக்கத்தின் பணிகள்

1. ஒவ்வொரு திருக்கோவில்களிலும் பக்தர்களை ஒன்றிணைத்தல்.

2. திருக்கோவில்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் உரிய தொடர்பை ஏற்படுத்தி ஆலயப்பணிகளில் முழுமையாக ஈடுபடுத்துதல்.

3. திருக்கோவில்களில் நித்திய பூஜைகள் செவ்வன நடைபெற பாடுபடுதல்.

4. விசேஷ நாட்களிலும் திருவிழாக்காலங்களிலும் தொண்டுகள் செய்தல்.

5. உற்சவ நாட்களில் சுவாமி திருவீதி உலா வரும் போது உடன் செல்லுதல்.

6. சுவாமி திருவீதி உலா வரும்போது மாட வீதிகளில் அனைத்து வீடுகளிலும் திருக்கண் வைக்க ஏற்பாடு செய்தல்.

7. திருவிழாக்காலங்களில் தண்ணீர்ப்பந்தல் வைத்தல், சுகாதாரம் பேண பாடுபடுதல்.

8. தேரோட்டம், தெப்பத்திருவிழா நன்றாக நடக்க தொண்டர்கள் அணி உருவாக்குதல்.

9. திருக்கோவில்களுக்கு தினசரி சென்று வழிபடுவதுடன் உடலால் உழைத்து உழவாரப்பணி செய்து கடவுளர்களுக்கு நம்மை மேலும் தகுதியாக்கிக் கொள்ளுதல்.

10. நந்தவனங்களை பராமரித்து, தெய்வீக மூலிகைச் செடிகள், தெய்வீக மரங்கள், தெய்வீக புஷ்பச் செடிகள் வளர்த்தல்.

11. திருக்கோவில் ஸ்தல விருக்ஷங்களை பாதுகாத்து வளர்த்தல்.

12. திருக்கோவில் குளங்களின் தீர்த்தம் மகிமை வாய்ந்தது. ஆகையால், அதன் தூய்மையை பாதுகாத்து திருக்குளங்களை நன்றாக பராமரித்தல்.

13. திருக்கோவில்களின் விக்கிரகங்கள், சிற்பங்கள், திருவாபரணங்கள், சொத்துக்கள், நிலங்கள் இவற்றை பாதுகாக்க உதவுதல்.

14. திருக்கோவில்களில் கூட்டு வழிபாடு, சத்சங்கம், பஜனை, சமய சொற்பொழிவுகள் நன்றாக நடத்தி பக்தி மணம் கமழும் ஸ்தலங்களாக பொலிவடையச் செய்தல்.

15. திருக்கோவில்களில் இளைய தலைமுறை நமது தர்மத்தையும், சமயத்தையும், பண்பாட்டையும் அறிய ஆன்மீக வகுப்புகள் நடத்துதல்.

16. திருக்கோவில்களில் வேத, திருமுறை திவ்விய பிரபந்தங்கள் தொடர்ந்து பாராயணம் நடக்க ஏற்பாடு செய்தல்.

17. திருக்கோவில்களில் ஆழ்வார்கள், நாயன்மார்கள், சித்தர்கள், முனிவர்கள், மகான்கள் இவர்களின் திருநட்சத்திரங்களை கொண்டாடி அவரவர்களுடைய திருக்குணங்களை நாம் பெற வேண்டும்.

18. திருக்கோவில்களில் பூஜை விதிகள், உற்சவ முறைகள், ஆகமங்கள் சிற்ப சாஸ்திரங்கள் இவைகளின் பெருமைகள் அறிய கருத்தரங்குகள் நடத்துதல்.

19. திருக்கோவில்களின் பெருமைகள், அங்கு நடந்த திருவிளையாடல்கள் அந்தந்த திருத்தலங்களின் மகிமை பற்றி அறிய ஸ்தல புராணங்கள் தொகுத்து புத்தகங்களாக வெளியிடுதல்.

20. திருக்கோவில்களில் பாடப்பெற்ற பதிகங்களையும், பாடல்களையும், ஸ்தோத்திரங்களையும் தொகுத்தல்.

21. திருக்கோவில் தோறும் ஆன்மீக நூல் நிலையங்களை உண்டாக்குதல்.

22. திருக்கோவில் அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேத விற்பன்னர்கள் இவர்களை ஆதரித்தல்.

23. திருக்கோவில்களில் ஊழியர்கள் நலன்களைப் பாதுகாத்து அவர்கள் நிலை உயர பாடுபடுதல்.

24. திருக்கோவில்களின் கலைஞர்களை ஆதரித்து பாரம்பரிய தெய்வீக கலைகளை சிதையாமல் வளர்த்தல்.